இளைஞர்களுக்கு வழிகாட்டும் வாஜ்பாயின் லட்சியங்கள்

லக்னௌ, டிச. 24: மறைந்த முன்னாள் பிரதமரும், பாரத ரத்னா விருது பெற்றவருமான அடல்பிகாரி வாஜ்பாயின் தேச பங்களிப்பும் அவரது லட்சியங்களும் இளைஞர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக திகழ்கின்றன என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

வாஜ்பாய் பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு உத்தர பிரதேச மாநிலம், லக்னௌவில் உள்ள கே.டி. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 'அடல் யுவ மகாகும்ப்' விழாவில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றுப் பேசியதாவது:

இந்திய அரசியல் வானில் கடந்த 1924, டிச. 25-ஆம் தேதி உதயமான சூரியன் இன்றுவரை அஸ்தமிக்காமல் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அடல் பிகாரி வாஜ்பாயின் ஆளுமை, செயல்களை இந்தியா மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகமும் நன்கு அறிந்துள்ளது.

வாஜ்பாய் ஒருமுறை பாகிஸ்தான் சென்றிருந்தபோது அவரிடம் பெண் நிருபர் ஒருவர் இவ்வாறு கூறினார். 'காஷ்மீரை வரதட்சிணையாக தந்தால் உங்களை திருமணம் செய்துகொள்வேன்' என்றார். அந்தப் பெண்ணுக்கு புன்னகையுடன் பதிலளித்த வாஜ்பாய், 'முழு பாகிஸ்தானையும் வரதட்சிணையாக நீங்கள் தந்தால் நானும் திருமணத்துக்கு தயார்' என்றார். இது அவரது மதிநுட்பத்தையும், நகைச்சுவை பண்பையும் வெளிக்காட்டுகிறது.

வாஜ்பாயின் ஆளுமை மிக உயர்ந்தது; அவரது தலைமைத்துவ பண்பும் முடிவுகளும் உலகம் முழுவதும் பாராட்டு பெற்றவை. அவரது இதயத்தில் லக்னௌவுக்கு சிறப்பு இடம் உண்டு.

வாஜ்பாயின் வழிகாட்டுதலுடன் அவரது அமைச்சரவையில் கேபினட் அமைச்சராக பணியாற்றுள்ளேன். வாஜ்பாய் அரசு ஒரு வாக்கு வித்தியாசத்தில் கவிழ்ந்தபோது அவரது வரலாற்று சிறப்புமிக்க பேச்சு, தேச பக்தியையும், ஜனநாயகத்தையும் மறுவரையறை செய்தது.

அரசுகள் வரும், போகும்; கட்சிகள் உருவாகும், காணாமல்போகும். ஆனால், இந்தத் தேசமும் அதன் ஜனநாயகமும் எப்போதும் நீடிக்கும் என்று கூறினார்.

வாஜ்பாயின் இந்தப் பேச்சு அவரது தொலைநோக்கு பார்வைக்கும் உறுதியான கொள்கைக்கும் சிறந்த சான்றாகும்.

வாஜ்பாய் தேசத்துக்கு ஆற்றிய பங்களிப்பும், அவரது லட்சியங்களும் இளைஞர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக திகழ்கின்றன. உத்தர பிரதேச மாநிலம் அனைத்து மாநிலங்களையும் விட வளர்ச்சியில் முன்னிலை வகிக்கிறது. முதல்வர் ஆதித்யநாத்தின் தலைமைத்துவமும் அயராத முயற்சியும் உத்தரபிரதேசத்தை புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. வாஜ்பாய் கண்ட கனவான வளம், வளர்ச்சியை இந்த மாநிலம் கண்டுள்ளது என்றார்.

இரண்டு நாள் மருத்துவக் கண்காட்சி: வாஜ்பாய் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு லக்னௌ, தில்குஷானில் நடைபெற்ற இரண்டு நாள் 'அடல் மருத்துவக் கண்காட்சியை' பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும், முதல்வர் ஆதித்யநாத்தும் தொடங்கிவைத்தனர்.

மேலும், ரூ. 662 கோடி மதிப்பிலான 181 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதோடு, பணி நிறைவடைந்த திட்டங்களை தொடங்கிவைத்தனர். இந்த நிகழ்ச்சியில் முதல்வர் யோகி ஆதித்யநாத் பேசியதாவது:

லக்னௌ தொகுதியில் இருந்து 5 முறை எம்.பி.யாகத் தேர்வு செய்யப்பட்டவர் மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய். ஸ்திரமற்ற இந்திய அரசியலை ஸ்திரமுள்ளதாக மாற்றியவர். இங்கு முதல் மருத்துவக் கண்காட்சி வாஜ்பாய் தலைமையில் 1998-99-இல் நடைபெற்றது. அதன்பின் இக் கண்காட்சி நடத்தப்படவில்லை. தற்போது கடந்த 5 ஆண்டுகளாக மருத்துவக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. 2020 முதல் 2023 வரை 50,000 பேர் இக்கண்காட்சியால் பலனடைந்துள்ளனர் என்றார்.

குஜராத்: விரைவு ரயில் தடம் புரண்டு விபத்து

மும்பை, டிச. 24: மும்பையின் தாதர்- குஜராத்தின் போர்பந்தர் இடையிலான சௌராஷ்டிரா பயணிகள் விரைவு ரயில், குஜராத்தின் சூரத் அருகே செவ்வாய்க்கிழமை பிற்பகல் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் உயிர்ச்சேதமோ யாருக்கும் காயமோ ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூரத்திலிருந்து 27 கி.மீ. தொலைவில் உள்ள கிம் ரயில் நிலையத்தில் இருந்து சௌராஷ்டிரா பயணிகள் விரைவு ரயில் பிற்பகல் 3.30 மணியளவில் போர்பந்தர் நோக்கி பயணத்தைத் தொடர்ந்தது. அப்போது, எஞ்சினுக்கு அடுத்துள்ள பயணிகள் அல்லாத பெட்டியின் நான்கு சக்கரங்கள் தண்டவாளத்தில் இருந்து இறங்கின. இந்த விபத்தில் உயிர்ச்சேதமோ, யாருக்கும் காயமோ ஏற்படவில்லை.

பதவிநீக்க தீர்மான நோட்டீஸ் 'துருப்பிடித்த கத்தி'

ஜகதீப் தன்கர் விமர்சனம்

புது தில்லி, டிச24: தனக்கு எதிராக பதவிநீக்க தீர்மானம் கொண்டுவர 'இண்டியா' கட்சிகள் அளித்த நோட்டீஸ் 'துருப்பிடித்த கத்தி' என்று குடியரசுத் துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான ஜகதீப் தன்கர் விமர்சித்தார்.

மாநிலங்களவையில் ஆளுங்கட்சிக்கு சாதகமாக பாரபட்சத்துடன் நடந்துகொள்வதுடன், பொது வெளியில் மத்திய அரசின் கொள்கைகள் குறித்து பேசும் செய்தித்தொடர்பாளர் போல செயல்படுவதாக ஜகதீப் தன்கர் மீது 'இண்டியா' கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இதனால் மாநிலங்களவைத் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கான தீர்மானத்தை அவையில் கொண்டுவர அக்கட்சிகள் நோட்டீஸ் அளித்தன. எனினும் அந்த நோட்டீஸை அவையின் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் நிராகரித்தார். இந்த விவகாரம் குறித்து முதல்முறையாக தில்லியில் உள்ள தனது அதிகாரபூர்வ இல்லத்தில் ஜகதீப் தன்கர் பெண் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது: எனக்கு எதிராக அளிக்கப்பட்ட நோட்டீஸில் எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டிருந்த விஷயங்களை பார்த்தால், அனைவரும் அதிர்ச்சியடைவர்.

பைபாஸ் அறுவைச் சிகிச்சைக்கு காய்கறிகளை வெட்டும் கத்தியைப் பயன்படுத்தக் கூடாது என்று முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கூறுவார். ஆனால் எனக்கு எதிராக அளிக்கப்பட்ட நோட்டீஸ் காய்கறி வெட்டும் கத்தியாகக் கூட இல்லை. அது துருப்பிடித்த கத்தி. அந்த நோட்டீஸ் அவசரகதியில் அளிக்கப்பட்டது.

இங்கு எவரும் பகைமையை தீர்த்துக்கொள்ள செயல்படவில்லை. மக்களாட்சியின் வெற்றிக்குப் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் மறுக்க முடியாத விஷயங்களாகும்' என்றார்.

சம்பல் மசூதி ஆய்வறிக்கை: நீதிமன்றத்தில் ஜனவரியில் தாக்கல்

சம்பல், டிச24: உத்தர பிரதேச மாநிலம், சம்பல் மாவட்டத்தில் கடந்த 16-ஆம் நூற்றாண்டில் சம்பல் பகுதியில் முகலாயர் ஆட்சி காலத்தில் ஷாஹி ஜாமா மசூதி கட்டப்பட்டது. ஹிந்துக் கோயிலை இடித்து விட்டு அந்த மசூதி கட்டப்பட்டதாக ஹிந்துக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தாக்கல் செய்த மனுவை விசாரித்த சம்பல் விசாரணை நீதிமன்றம், அந்த மசூதியில் நீதிமன்ற ஆணையரின் ஆய்வுக்கு உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து மசூதியில் 2-ஆம் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உள்ளூர்வாசிகள் வன்முறையில் ஈடுபட்டனர். இந்த வன்முறையில் 4 பேர் உயிரிழந்தனர். காவல் துறையினர் உள்பட பலர் காயமடைந்தனர்.

இந்நிலையில், மசூதியில் ஆய்வு மேற்கொண்ட நீதிமன்ற ஆணையரான வழக்குரைஞர் ரமேஷ் சிங் ராகவ், சம்பலில் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'ஷாஹி ஜாமா மசூதி ஆய்வறிக்கையை நிறைவு செய்யும் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. அடுத்த மாதம் ஜன.2 அல்லது ஜன.3-ஆம் தேதி விசாரணை நீதிமன்றத்தில் ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும்' என்றார்.

திரைப்பட இயக்குநர் ஷியாம் பெனகல் (90) மறைவு

குடியரசுத் தலைவர், பிரதமர் இரங்கல்

மும்பை, டிச.24: பிரபல ஹிந்தி திரைப்பட இயக்குநர் ஷியாம் பெனகல் (90) திங்கள்கிழமை காலமானார். அவரது மறைவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்தனர்.

மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் உள்ள வாக்ஹார்டு மருத்துவமனையில் சிறுநீரக நோய் பாதிப்புகளுக்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

கடந்த 14-ஆம் தேதி அவர் தனது 90-ஆவது பிறந்தநாளை கொண்டாடினார்.

1970, 1980-களில் பல சிறந்த திரைப்படங்களை இயக்கி இந்திய அளவில் பிரபலமான இயக்குநராக ஷியாம் பெனகல் அறியப்பட்டார். 'அங்கூர்', 'மந்தன்' போன்ற படங்களையும் மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆகியாரின் சுயசரிதையை விளக்கும் ஆவணப் படங்களையும் அவர் இயக்கியுள்ளார்.

'திரைத்துறைக்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பு என்றென்றும் நினைவில் இருக்கும்' என அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து குடியரசுத் தலைவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில்,' பெனகலை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் ரசிகர்களுக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய சினிமா என்றென்றும் உங்களை நினைவுகூரும்' என குறிப்பிட்டார்.

அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்

Arcil Premier ARC

வலைதளம் : www.arcil.co.in , CIN : U65999MH2002PLC134884

(SMRJ கண்மணி சில்க்ஸ் / J.P.R டெக்ஸ்டைல்ஸ் / ஸ்ரீ சுமித் கார்மெண்ட்ஸ் – ன் நிதிச்சொத்துக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்ட Arcil–SBPS–073–ஐ Trust – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)

ஆர்சில் அலுவலகம் – தி ரூபி, 10 வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு) மும்பை – 400 028

பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் "2002 (சர்ஃபாசி சட்டம்) – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 & 9 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி ஆன்லைன் மூலம் நடைபெறும் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமின்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், DBS வங்கி (முன்பு லட்சுமி விலாஸ் வங்கி) ஆர்சில் – க்கு 23 டிசம்பர் 2022 தேதிய பதிவு செய்யப்பட்ட பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் வாயிலாக, நிதிச்சொத்துக்கள் பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) Arcil–SBPS–073–ஐ Trust (ஆர்சில்) – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் – க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 மற்றும் 9 ன் கீழ், "'இருக்கின்ற இடத்தில்", "'இருக்கின்ற நிலையில்" "'இருக்கின்றவற்றுடன்" மற்றும் "'திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கடன்தாரர் பெயர்	SMRJ கண்மணி சில்க்ஸ் / J.P.R டெக்ஸ்டைல்ஸ் / ஸ்ரீ சுமித் கார்மெண்ட்ஸ்
ஜாமின்தாரர்கள் / கூட்டு கடன்தார்கள் / அடமானதாரர்கள் பெயர்	1). திரு S. முருகேசன், 2). திருமதி J கண்மணி, 3). திரு S.M ஜெயர்காஷ், 4). திரு J. தயானந்த், 5). திருமதி H. M. சுமிதா
09 செப்டம்பர் 2024 தேதிய சர்ஃபாசி சட்டத்தின் படியிலான நிலுவைத்தொகை	20.12.2024 ம் தேதியின் படி, ரூ. 35,69,08,928/– (இந்திய ரூபாயில். முப்பத்து ஐந்து கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து எட்டு மட்டும்) மற்றும் ஒப்பந்த வீதத்தில் / ஆவணத்தில் உள்ள வீதத்தின் படி மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் 21 டிசம்பர் 2024 முதல் தொகையை திருப்பி செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் இதர நிகழ் செலவுகள் ஆகியன.
சுவாதீனம்	DBS வங்கி, சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகளின் படி, 2019 மார்ச் 07 அன்று அடையாள சுவாதீனம் எடுத்துள்ளது.
ஆய்வு தேதி	வேண்டுகோளின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.
டேவணித்தொகை	சொத்து எண். 01 – ரூ. 9,50,000/– (இந்திய ரூபாயில் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) சொத்து எண். 02 – ரூ. 9,30,000/– (இந்திய ரூபாயில் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) சொத்து எண். 03 – ரூ. 10,20,000/– (இந்திய ரூபாயில் பத்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) சொத்து எண். 04 – ரூ. 7,70,000/– (இந்திய ரூபாயில் ஏழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) சொத்து எண். 05 – ரூ. 6,50,000/– (இந்திய ரூபாயில் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) சொத்து எண். 06 – ரூ. 11,30,000/– (இந்திய ரூபாயில் பதினோரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) சொத்து எண். 07 – ரூ. 20,30,000/– (இந்திய ரூபாயில் இருபது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) டேவணித்தொகையை RTGS மூலம் "Asset Reconstruction Company (India) Ltd" என்ற பெயருக்கு நடப்பு கணக்கு எண். 029123200005 61 HDFC பேங்க் லிமிட்டெட்., கிளை – லோயர் பரேல், மும்பை, IFSC Code : HDFC0000291 க்கு செலுத்தப்பட வேண்டும்.
விலைப்புள்ளி & டேவணித்தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி	09.01.2025 மாலை 05.00 மணி வரை
அடிப்படை விலை	சொத்து எண். 01 – ரூ. 95,00,000/– (இந்திய ரூபாயில் தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) சொத்து எண். 02 – ரூ. 93,00,000/– (இந்திய ரூபாயில் தொண்ணூற்று மூன்று இலட்சம் மட்டும்) சொத்து எண். 03 – ரூ. 1,02,00,000/– (இந்திய ரூபாயில் ஒரு கோடியே இரண்டு இலட்சம் மட்டும்) சொத்து எண். 04 – ரூ. 77,00,000/– (இந்திய ரூபாயில் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும்) சொத்து எண். 05 – ரூ. 65,00,000/– (இந்திய ரூபாயில் அறுபத்து ஐந்து இலட்சம் மட்டும்) சொத்து எண். 06 – ரூ. 1,13,00,000/– (இந்திய ரூபாயில் ஒரு கோடியே பதிமூன்று இலட்சம் மட்டும்) சொத்து எண். 07 – ரூ. 2,03,00,000/– (இந்திய ரூபாயில் இரண்டு கோடியே மூன்று இலட்சம் மட்டும்)
விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	சொத்து எண். 01 – ரூ. 25,000/– (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) சொத்து எண். 02 – ரூ. 25,000/– (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) சொத்து எண். 03 – ரூ. 30,000/– (இந்திய ரூபாயில் முப்பதாயிரம் மட்டும்) சொத்து எண். 04 – ரூ. 25,000/– (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) சொத்து எண். 05 – ரூ. 25,000/– (இந்திய ரூபாயில் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) சொத்து எண். 06 – ரூ. 30,000/– (இந்திய ரூபாயில் முப்பதாயிரம் மட்டும்) சொத்து எண். 07 – ரூ. 30,000/– (இந்திய ரூபாயில் முப்பதாயிரம் மட்டும்)
மின்னணு ஏல தேதி & நேரம்	10.01.2025 & சொத்து எண். 1 @ நண்பகல் 12.00 மணி சொத்து எண். 2 @ நண்பகல் 12.30 மணி சொத்து எண். 3 @ பிற்பகல் 02.00 மணி சொத்து எண். 7 @ மாலை 04.00 மணி சொத்து எண். 4 @ பிற்பகல் 02.30 மணி சொத்து எண். 5 @ மாலை 03.00 மணி சொத்து எண். 6 @ மாலை 03.30 மணி
விலைப்புள்ளி ஆவணங்களுக்கான இணையுப	www.arcil.co.in
ARCIL க்கு தெரிந்து நிலுவையிலுள்ள வில்லங்கங்கள்	அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வழக்கு நிலுவையும் இல்லை
ARCIL க்கு தெரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள்	அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில், சொத்து மீது எந்த வில்லங்கமும் இல்லை
ஏலம் விடப்படவுள்ள ஜாமீன் சொத்து விபரம்	அடமான சொத்துக்களின் விபரம் – சொத்து எண். 1 –சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், நாமக்கல் மாவட்டம், சேலம் தாலுக்கா, இளம்பிள்ளை கிராமம், இளம்பிள்ளை டவுன் பஞ்சாயத்து, R S எண். 43/5., உட்பிரிவு படி சர்வே எண். 43/5B ல் அமையப்பெற்ற 6203 சதுர அடி. சொத்து எண். 2). சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, வீரபாண்டி ஒன்றியம், பெருமாகவுண்டம்பட்டி கிராமம், சர்வே எண். 27/1, 27/10 & 38/11 ல் உள்ள 6240 சதுர அடி. சொத்து எண். 3). சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, வீரபாண்டி ஒன்றியம், பெருமாகவுண்டம்பட்டி கிராமம், சர்வே எண். 27/1, 27/10 & 38/11 ல் உள்ள 6836 சதுர அடி. சொத்து எண். 4). சேலம் மாவட்டம், சேலம், டவுன், சேலம் மாநகராட்சி (புதியது) சேலம் மாநகராட்சி எல்லை (பழையது) அம்மாபேட்டை கிராமம், பொன்னம்மாபேட்டை, வாசங்க சாலை தெரு, மிட்டா சர்வே எண். 182, பழைய T.S. எண் : 57/1, உட்பிரிவு சர்வே எண். 57/1B7, T.S. எண்: 25., புதிய வார்டு AG, ப்ளாக் 5, பழைய வார்டு "M" ல் இடத்தின் உரிமையாளர் – திரு J தயானந்த் பெயரில் உள்ள பரப்பு 2400 சதுர அடி. சொத்து எண். 5). சேலம் மாவட்டம் – 637 502, மகுடஞ்சாவடி சார்பதிவகம், சங்ககிரி தாலுக்கா, இடங்கணசாலை கிராமம், சர்வே எண். 657/2C. கலந்தி நகர், கதவு எண். 10/245, இடத்தின் உரிமையாளர் பெயர் – திருதயானந்த் – பரப்பு 1800 சதுர அடி. சொத்து எண். 6). சேலம் மாவட்டம் – 637 502, மகுடஞ்சாவடி சார்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, பெருமாகவுண்டன்பட்டி கிராமம், சர்வே எண். 27/10, காளியம்மன் கோவில் தெரு, கதவு எண். 6/206, 207, இடம் & கட்டிடத்தின் உரிமையாளர் – திரு முருகேசன் – இடம் – 4172 சதுர அடி. கட்டமைப்பு – 8119 சதுர அடி. சொத்து எண். 7). சேலம் மாவட்டம் – 637 502, மகுடஞ்சாவடி சார்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, பெருமாகவுண்டன்பட்டி கிராமம், சர்வே எண். 38/2 மற்றும் 38/11, காளியம்மன் கோவில் தெரு, கதவு எண். 6/213, 6/214, இடம் & கட்டிடம். உரிமையாளர் பெயர் – திரு முருகேசன் – இடம் – 80 சென்ட் அதாவது 34848 சதுர அடி கட்டமைப்பு – 4629 சதுர அடி.

விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன –

1). ஏல விற்பனையானது அதிகாரப்பூர்வ அலுவலரால் சர்ஃபாசி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அதன் உதவியுடன் மின்னணு ஏலம் மூலம் நடைபெறும். விலைகோரல் "'ஆன்லைன் மின்னணு விலைகோரல்" வாயிலாக வலைதளம் www.arcil.co.in மூலம் மட்டுமே நடைபெறும். ARCIL என்பது மின்னணு ஏலத்துக்கான தளத்தை ஏற்படுத்தி கொடுக்கும் சேவைதாரராகும்.

2). ஏலமானது விலைப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியும் மற்றும் அதில் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறைகளின் படியும் நடத்தப்படும். ஏலதாரர்கள் ARCIL ன் வலைதளம் www.arcil.co.in யையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு மற்றும் சேவைதாரர் ARCIL ன் வலைதளத்தையும் விலைப்புள்ளி ஆவணங்களுக்கும், ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்துக்களின் விபரங்களுக்கும் / விலைப்புள்ளி படிவங்களை பெறுவதற்கும் பார்வையிடலாம்.

3). ஏலதாரர்கள் தங்களது சொந்த அலுவலகங்கள் / அவர்களது விருப்பத்துக்குரிய இடத்திலிருந்து விலைகோரி / விலைப்புள்ளி சமர்ப்பித்து மின்னணு ஏலத்தில் பங்கேற்கலாம். அந்தந்த ஏலதாரரால் இண்டர்நெட் இணைப்பை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிகாரப்பூர்வ அலுவலர் / ARCIL / சேவைதாரர் இண்டர்நெட் தொடர்பிழப்பு, நெட்வொர்க் பிரச்சினைகள், கணிப்பொறி செயலிழப்பு, மின் துண்டிப்பு போன்ற காணாரங்களுக்கு பொறுப்பல்ல.

4). விபரங்களுக்கும், உதவிக்கும், செயல்முறைக்கும் மின்னணு ஏலம் தொடர்பான ஆன்லைன் பயிற்சிக்கும் உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன், திரு இர்ஃபான், திரு மிரஜ் சயீத் ஆகியோரை தொடர்பு எண்கள். 9176500311, 9787862271, 9820485425 மின்னஞ்சல் முகவரி – gurunathan.solaiappan@arcil.co.in irfan.a@arcil.co.in , meraj.sayed@arcil.co.in ல் தொடர்பு கொள்ளலாம்.

5). வாங்குவதில் விருப்பமுள்ளவர்கள் / ஏலதாரர்கள் தங்களது பெயர்களை இதன் மேற்குறிப்பிட்ட www.arcil.co.in ல் பதிவு செய்து கொண்டு, இதன் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறவுள்ள மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6). சொத்து ஆய்வு மற்றும் கூடுதல் தகவல்களுக்கு உத்தேச ஏலதாரர்கள் திரு குருநாதன் 91765 00311 (அலைபேசி) gurunathan.solaiappan@arcil.co.in திரு இர்ஃபான் A, 9787862271 (அலைபேசி) irfan.a@arcil.co.in, திரு மிரஜ் சயீத், 98204 85425 (அலைபேசி) meraj.sayed@arcil.co.in அல்லது இதன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

7). ஏலத்தின் எந்த நிலையிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், எந்த முன்னறிவிப்பும் வழங்காமல், விலைப்புள்ளியை / விலைகோரலை ஏற்றுக்கொள்ள / நிராகரிக்க / மாற்ற / ரத்து செய்ய அல்லது ஏலத்தை ஒத்தி வைக்க உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

8). வாங்குவதில் பெற்றி பெற்றவர் / ஏலதாரரே சட்டபூர்வ நிலுவைகள் (ஏதேனும் இருப்பின்), வரிகள், செலுத்தத்தக்க கட்டணங்கள், வாங்கும் விலை மீதான GST, ஜாமீன் சொத்துக்களை தமது பெயரில் பரிமாற்றம் செய்ய ர வழங்கப்பெற சட்டப்படி செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9). விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, ஏலத்துக்கு விடப்பட்டுள்ள ஜாமீன் சொத்து தொடர்பான சொத்துரிமை, வில்லங்கம் மற்றும் ஜாமீன் சொத்துஃகளை பாதிக்கும் கோரிக்கைகள் / சட்டபூர்வ நிலுவைகள் உள்ளிட்ட நிலுவைகள் போன்றவற்றை சுய சிரத்தையுடன் விசாரித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஏல விளம்பரம் ARCIL ன் எந்த பிரதிநிதித்துவத்தையோ உத்திரவாதத்தையோ வழங்கவில்லை., வழங்கப்போவதுமில்லை. ARCIL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் எந்த விதத்திலும் மூன்றாம் நபரின் கோரிக்கைகள் / உரிமைகள் / நிலுவைகளுக்கு பொறுப்பல்ல.

10). இந்த செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும், இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபரின் சிறந்த தகவலுக்கு எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும் அதில் ஏதேனும் பிழையோ. நவறான கூற்றோ அல்லது தவிர்த்தல்களோ இருப்பின், அதன்கு இதன் கீழ்க்கையொப்பமிடப்பட்ட நபர் பொறுப்பல்ல.

11). ஏதேனும் நீதிமன்றம் / தீர்ப்பாயத்தின் தலையீடு / உத்தரவு காரணமாக ஏற்படும் நிகழ்வுகள் / பின் விளைவுகளால், விற்பனையை ரத்து செய்ய நேர்ந்தால், (பொருத்தமான சட்ட கருத்துரை மற்றும் ARCIL க்கு உள்ள சட்டபூர்வ தீர்வு) ARCIL ஆனது "'டேவணித்தொகை" யை வட்டியின்றி வாங்குபவர் / ஏலதாருக்கு திரும்ப வழங்கிடும் மற்றும் / அல்லது "'விற்பனை செயல்முறைகள்" திரும்ப பெற்றுக்கொள்ளும். வாங்குபவரோ / ஏலதாரரோ ARCIL அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக, இழப்பு, செலவுகள் / செலவுகள் / வியாபார வாய்ப்பிழப்பு போன்ற எவ்விதத்திலான எந்த கோரிக்கையையும் எழுப்ப உரிமையில்லை.

12). மேற்சொன்ன நிலுவைத்தொகைகளுக்கு பொறுப்பாக உள்ள கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் இந்த விற்பனை அறிவிப்பை, இதன் மேற்குறிப்பிட்ட ஏல விற்பனை நடத்தப்பவிருப்பதற்கான, பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8 மற்றும் 9 ன் கீழான அறிவிப்பு எனவும் கருதிக்கொள்ள வேண்டும்.

13). ஏதேனும் காரணத்துக்காக, இதன் மேற்குறிப்பிட்டவாறு ஏலம் நடைபெறவில்லையெனில், ARCIL க்கு பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(5) மற்றும் சர்ஃபாசி சட்டம் 2002 ன் கீழான ஏதேனும் இதர முறைகளின் கீழ், ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய உரிமை உள்ளது.

ஒப்பம்/–
அதிகாரப்பூர்வ அலுவலர்
அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்
Arcil–SBPS–073–ஐ Trust – ன் அறங்காவலர்

இடம் – சேலம்
தேதி – 25.12.2